هداية

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்ப்பங்கள்

# தீய ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்பங்கள்

## தீய ஊசலாட்டங்கள் ஏற்படும் போது : 1

وَاِمَّا يَنْزَغَنَّكَ مِنَ الشَّيْطٰنِ نَزْغٌ فَاسْتَعِذْ بِاللّٰهِ اِنَّهٗ سَمِيْعٌ عَلِيْمٌ

"ஷைத்தான் ஏதாவதொரு [தவறான] எண்ணத்தை உம் மனத்தில் ஊசலாடச் செய்து [தவறு செய்ய உம்மைத்] தூண்டினால், அப்போது அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவீராக! மெய்யாகவே அவன் செவியேற்பவனாகவும், [யாவற்றையும் நன்கு] அறிபவனாகவும் இருக்கின்றான்." [அல்குர்ஆன் 7:200]

وَاِمَّا يَنْزَغَنَّكَ مِنَ الشَّيْطٰنِ نَزْغٌ فَاسْتَعِذْ بِاللّٰهِ اِنَّهٗ سَمِيْعٌ عَلِيْمٌ

"உங்களுக்கு ஷைத்தானிடத்திலிருந்து ஏதேனும் ஊசலாட்டம் [தீயதைச் செய்ய] உம்மைத் தூண்டுமாயின், உடனே அல்லாஹ்விடம் காவல் தேடிக் கொள்வீராக! நிச்சயமாக அவன் [யாவற்றையும்] செவியேற்பவன்; நன்கறிபவன்." [அல்குர்ஆன் 41: 36].

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்ப்பங்கள்

## இல்லற உறவின் போது : 2

بِسْمِ اللَّهِ، اللَّهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وَجَنِّبِ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا

இறைத்தூதர் (ﷺ)அவர்கள் கூறினார்கள்: “உங்களில் ஒருவர் தன் வீட்டாரிடம் (உடலுறவு கொள்ள) வந்து, ‘பிஸ்மில்லாஹ் – அல்லாஹ்வின் திருப்பெயரால் – இறைவா! ஷைத்தானை எங்களிடமிருந்து விலகியிருக்கச் செய். எங்களுக்கு நீ அளிக்கும் சந்ததிகளிடமிருந்தும் ஷைத்தானை விலகியிருக்கச் செய்’ என்று பிரார்த்தனை புரிந்து, பிறகு அவர்களுக்குச் சந்ததி அளிக்கப்பட்டால் அந்தச் சந்ததிக்கு ஷைத்தான் தீங்கு செய்யமாட்டான். என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்.

(புஹாரி 3271).

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்பங்கள்

## ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுத்தவுடன்: 3

“(பின், தான் எதிர்பார்த்ததற்கு மாறாக) அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றதும்: “என் இறைவனே! நான் ஒரு பெண்ணையே பெற்றிருக்கிறேன்” எனக் கூறியதையும் நினைவு கூறுங்கள்; அவள் பெற்றெடுத்ததை அல்லாஹ் நன்கறிவான்;

ஆண், பெண்ணைப் போலல்ல (மேலும் அந்தத்தாய் சொன்னாள்:) “அவளுக்கு மர்யம் என்று பெயரிட்டுள்ளேன்; இன்னும் அவளையும், அவள் சந்ததியையும் விரட்டப்பட்ட ஷைத்தானி(ன் தீங்குகளி)லிருந்து காப்பாற்றத் திடமாக உன்னிடம் காவல் தேடுகின்றேன்.”

(அல்குர்ஆன் 3: 36).

4

## அல்குர்ஆனை ஓத ஆரம்பிக்கும் போது :

**“மேலும் (நபியே!) நீர் குர்ஆனை ஓதுவீராயின் (முன்னதாக) வெருட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் காவல் தேடிக்கொள்வீராக.**

(அல்குர்ஆன் 16:98).

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்ப்பங்கள்

## ஷைத்தான் இவ்வாறான சந்தேகத்தை ஏற்படுத்தும் போது:

5

இறைத்தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவரிடம் (அவர் மனத்திற்குள்) ஷைத்தான் வந்து, 'இதைப் படைத்தவர் யார்? இதைப் படைத்தவர் யார்?' என்று கேட்டுக் கொண்டே வந்து, இறுதியில்,

'உன் இறைவனைப் படைத்தவர் யார்?' என்று கேட்கிறான். இந்தக் (கேள்வி கேட்கும்) கட்டத்தை அவன் அடையும்போது அவர் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடட்டும். (இத்தகைய சிந்தனையிலிருந்து) விலகிக் கொள்ளட்டும். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

(புஹாரி 3276).

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்ப்பங்கள்

## தொழுகையில் ஷைத்தானின் ஊசலாட்டம் ஏற்பட்டால் : 6

அபுல் அலாஉ அல்ஆமிரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது: உஸ்மான் பின் அபில்ஆஸ் (ரலி) அவர்கள் நபி (ﷺ) அவர்களிடம் சென்று, “அல்லாஹ்வின் தூதரே! (நான் தொழுது கொண்டிருக்கும்போது) எனக்கும் எனது தொழுகைக்கும் எனது ஓதலுக்குமிடையே ஷைத்தான் தடையாய் நின்று எனக்குக் குழப்பத்தை ஏற்படுத்துகிறான்” என்று கூறினார்கள்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “அவன்தான் “கின்ஸப்” எனப்படும் ஷைத்தான் ஆவான். அவனை நீங்கள் உணர்ந்தால் அவனிடமிருந்து காக்குமாறு அல்லாஹ்விடம் கோரி, உங்கள் இடப் பக்கத்தில் மூன்று முறை துப்பிவிடுங்கள்” என்று கூறினார்கள். அவ்வாறே நான் செய்தபோது, என்னிடமிருந்து அவனை அல்லாஹ் அப்புறப்படுத்திவிட்டான்.

(முஸ்லிம் 4431).

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்பங்கள்

## கெட்ட கனவு கண்டால்: 7

உங்களில் எவரேனும் தாம் விரும்பாத தீய கனவு கண்டால் உடனே அவர் தம் இடப் பக்கத்தில் துப்பட்டும். ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பும் கோரட்டும். அப்போது அவருக்கு அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்திட இயலாது. (அறிவிப்பவர்: அபூ கத்தாதா ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள்,

(புஹாரி 7005).

## கொட்டாவியின் போது என்ன செய்ய வேண்டும்?:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்' அல்லாஹ் தும்மலை விரும்புகிறான்; கொட்டாவியை வெறுக்கிறான். எனவே, ஒருவர் தும்மியவுடன் 'அல்ஹம்துலில்லாஹ்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்று சொன்னால், அதைக் கேட்கும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அவருக்கு ('யர்ஹமுக்கல்லாஹ் – அல்லாஹ் உங்களுக்குக் கருணை புரியட்டும்' என்று) மறுமொழி கூறுவது அவசியமாகும். ஆனால், கொட்டாவி ஷைத்தானிடமிருந்து வருவதாகும். உங்களில் எவரேனும் கொட்டாவிவிட்டால் முடிந்தவரை அதைக் கட்டுப்படுத்தட்டும். ஏனெனில், யாரேனும் (கட்டுப்படுத்தாமல்) 'ஹா' என்று (கொட்டாவியால்) சப்தமிட்டால் ஷைத்தான் சிரிக்கிறான். என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். .

(புஹாரி 6223).

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்ப்பங்கள்

## கழுதை கத்தும் போது: 8

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் சேவல்கள் கூவுகிற சத்தத்தைக் கேட்டால் அல்லாஹ்விடம் அவனுடைய அருளைக் கேளுங்கள்:

ஏனெனில், அவை வானவரைப் பார்த்திருக்கின்றன. (எனவேதான் கூவுகின்றன.) கழுதை கத்தும் சத்தத்தை நீங்கள் கேட்டால் ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள். ஏனெனில், அது ஷைத்தானைப் பார்த்திருக்கிறது. (எனவேதான் கத்துகிறது.) என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

(புஹாரி 3303).

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்ப்பங்கள்

## இரவில் இவைகளின் சப்தத்தைக் கேட்கும் போது : 9

“இரவில் நாய்கள் குரைப்பதையும், கழுதைகள் கத்துவதையும் கேட்டால் நீங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள். ஏனெனில் அவைகள் நீங்கள் பார்க்காதவற்றைப் பார்க்கின்றன” என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள்,

ஆதாரம்: அபூதாவூத் 4460

## 10

## கழிவறைக்குள் நுழையும் போது :

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ

'கழிப்பிடத்திற்குச் சென்றபோது, 'இறைவா! அருவருக்கத் தக்க செயல்கள், இழிவான பண்பாடுகள் ஆகியவற்றைத் தூண்டும் ஷைத்தானைவிட்டு உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்' என்று கூறும் வழக்கமுடையவர்களாக நபி (ﷺ) அவர்கள் இருந்தார்கள்' என

அனஸ்(ரலி) அறிவித்தார்.
(புஹாரி 142).

## கோபம் ஏற்படும் போது : 11

சுலைமான் இப்னு ஸுரத்(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் அருகில் இரண்டு பேர் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டார்கள். அப்போது நாங்கள் நபி(ஸல்) அவர்கள் அருகில் அமர்ந்துகொண்டிருந்தோம். அவர்களில் ஒருவரின் முகம் சிவந்து விட்டிருக்கக் கோபத்துடன் தம் தோழரைத் திட்டிக் கொண்டிருந்தார். அப்போது நபி(ஸல்) அவர்கள், 'எனக்கு ஒரு (பிரார்த்தனை) வார்த்தை தெரியும். அதை இவர் சொல்வராயின் இவருக்கு ஏற்பட்டுள்ள கோபம் போய்விடும்.

'அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்' (சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறேன்) என்பதே அச்சொல்லாகும்' என்று கூறினார்கள். எனவே, மக்கள் அம்மனிதரிடம், நபி(ஸல்) அவர்கள் சொல்வதை நீர் செவியேற்கவில்லையா? என்று கூறினார். அந்த மனிதர், 'நான் பைத்தியக்காரன் அல்லன்' என்றார்.

(புஹாரி 6115).

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்ப்பங்கள்

## 12 மாலையில் ஓத வேண்டிய துஆக்களில்:

أَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

“அல்லாஹ்வின் நிறைவான வார்த்தைகளைக் கொண்டு அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.”

(பொருள்: அல்லாஹ்வின் முழுமையான சொற்களின் மூலம் அவனுடைய படைப்பினங்களின் தீங்கிலிருந்து நான் பாதுகாப்புக் கோருகிறேன்.)

(ஒரு முறை) நபி (ﷺ) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! நேற்றிரவு என்னைத் தேள் ஒன்று கொட்டிவிட்டது. அதனால் நான் (நிம்மதியான தூக்கத்தை) இழந்துவிட்டேன்” என்று கூறினார். அதற்கு நபி(ﷺ) அவர்கள், “நீ மாலைப் பொழுதை அடையும்போது இதைக் கூறியிருந்தால் அது உனக்குத் தீங்கிழைத்திருக்காது” என்று கூறினார்கள்.

(அறிவிப்பவர்: அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,

முஸ்லிம் 5248).

# தீய ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டிய சந்தர்ப்பங்கள்

## பயணத்தில் ஓரிடத்தில் இறங்கும் போது : 13

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

“அல்லாஹ்வின் நிறைவான வார்த்தைகளைக் கொண்டு அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.”

(பொருள்: அல்லாஹ்வின் முழுமையான சொற்களின் மூலம் அவனுடைய படைப்பினங்களின் தீங்கிலிருந்து நான் பாதுகாப்புக் கோருகிறேன்.)

என்று கூறிப் பிரார்த்தித்தால், அந்த இடத்திலிருந்து அவர் புறப்பட்டுச் செல்லும்வரை எதுவும் அவருக்குத் தீங்கிழைக்காது” என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: கவ்லா பின்த் ஹகீம் அஸ்ஸுலமிய்யா (ரலி) அவர்கள்,

ஆதாரம்: முஸ்லிம் 5247)

## பிள்ளைகளுக்கு தீங்குகள் ஏற்படும் என அஞ்சும் போது : 14

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّةِ ،
مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ ، وَمِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ.

“அல்லாஹ்வின் முழுமையான (குணமளிக்கும்) சொற்களைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும் நச்சுப் பிராணியிடமிருந்தும் தீய எண்ணத்துடன் தீண்டும் (பொறாமைக்) கண்ணிலிருந்தும் அவனிடம் பாதுகாப்புக் கோருகிறேன்”

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா,

புஹாரி 3371).